# மணப்பாறை நகராட்சி

**2019- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (17.09.2019) 17 – ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 17.09.2019 | **பொருள் – 1**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் TURIP-2019-2020ம் ஆண்டு நிதியின் கீழ் தார்சாலைகள் அமைக்கும்பணி மேற்கொள்ள ரூ.300.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்து நிர்வாக அனுமதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3 நாள்.03.09.2019 கடிதத்தின்படி கீழ்க்கண்டவாறு மன்றப்பொருள் வைத்து அதன் விபரத்தினை அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.610 அனுமதிக்கப்பட்டது.** |

| நகராட்சி/ மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மானிய நிதி /நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| மணப்பாறை | 300.00 | 0.50 | 1.90 | 0.60 |

மேற்படி விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | W. No | Name of Work | Type of work (BT/ CC | Length in KM | Width In Meter | Estimate Cost Rs. Lakhs |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | Vidathilampatty to sevalur in Manapparai | B.T | 1.774 | 5.00 | 122.00 |
| 2 | 2 | Sevalur Mariamman Koil to Jallikattu West Kalam, | B.T | 1.242 | 5.00 | 178.00 |
| 3 | 3 | Sangamarettiyapatty road | B.T | 0.995 | 4.00 | |
| 4 | 6 | Annavinagar & Cross street | B.T | 0.641 | 4.00 | |

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்

17.09.2019

**பொருள் – 2**

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் செ.மு.அ/8/2127/2019 நாள்.31.08.2019 திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறைகளின்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் Jal Shakti Abhiyan **2019** திட்டம் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக Central Nodal Officer நியமனம் செய்யப்பட்டு மத்திய ஆய்வு குழு அலுவலர்கள் 07.07.2019 முதல் 13.07.2019 வரை அனைத்து துறை சார்ந்த ஆய்வுக் கூட்டம் மற்றும் களப்பணி மேற்கொள்ள செலவிடப்பட்ட செலவினத்தொகை வழங்குவது தொடர்பான செயல்முறைகள் வழி உத்திரவிடப்பட்டுள்ளது.

ஜல் சக்தி அபியான் – 2019 தொடர்பாக சம்மந்தப்பட்ட துறைகள் வழங்க வேண்டிய தொகை விபரம்

| வ.எண் | சம்மந்தப்பட்ட துறை | தொகை (ரூ) |
|---|---|---|
| 7 | ஆணையர், மணப்பாறை நகராட்சி | **18,267** |

எனவே மேற்படி தொகை ரூ.18267/–அய் Project Director , District Rural Development Agency Tiruchirappalli பெயரில் வங்கி வரைவோலையாக (Demend Draft) எடுத்து திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பிவைக்கவும் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.611 அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 17.09.2019 | **பொருள் – 3**<br>இந்நகராட்சி நிரந்தர பணியாளர்கள் (துப்புரவு பணியாளர்கள் உட்பட ) வருகையினை துல்லியமாக கண்காணித்து பணியினை மேம்படுத்திட இரண்டு சுகாதார பிரிவு அலுவலகம் மற்றும் நகராட்சி அலுவலகத்திலும் மொத்தம் மூன்று எண்ணிக்கையிலான மின்னனு வருகைப்பதிவு இயந்திரம் (Biometric Attendance Device) விலைப்புள்ளி பெற்று வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2.மேற்காணும் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(எச்1/2019/19) | **தீர்மான எண்.612 அனுமதிக்கப்பட்டது.** |
| 17.09.2019 | **பொருள் – 4**<br>இந்நகராட்சியில் தட்டச்சுப்பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருவதில், மாவட்ட ஆட்சித்தலைவர் , திருச்சிராப்பள்ளி அவர்களின் செயல்முறை ஆணை ந .க.J3/9779/2019 நாள்.16.08.2019-ன்படி தட்டச்சுபணிக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ .462/- வீதம் வழங்க உத்திரவிட்ட தின்படி, 09/2019 முதல் நாள் ஒன்றுக்கு ரூ.462/- வீதம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கும், செலவின தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.613 அனுமதிக்கப்பட்டது.** |
| 17.09.2019 | **பொருள் – 5**<br>2018-19 நிதியாண்டிற்கும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளக்ளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை, 2 காலாண்டிற்கு GST-க்கு சம்மந்தப்பட்ட அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதை E - Filling E -TDS மூலம் செய்யப்பட்டதற்கு செலவு தொகை ரூ ,40,000/-அய் தணிக்கையாளருக்கு வழங்கவும் , செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1) மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.614 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 17.09.2019 | **பொருள் – 6**<br>இந்நகராட்சியில் 2019-2020-ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள் படிவங்கள், கணினி சேவை மையத்திற்கு தேவையான ரசீதுகள் , டோனர்கள், பிரிண்டிங் ரிப்பன், A4, A3 பேப்பர்கள் வாங்கவும் மற்றும் டோனர்கள் Refill செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 ( ஐந்து லட்சம்) லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>வருவாய் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளலாம் | **தீர்மான எண்.615 அனுமதிக்கப்பட்டது.** |
| 17.09.2019 | **பொருள் – 7**<br>இந்நகராட்சியில் இயங்கி வரும் 5 KVA UPS பேட்டரி 5 ஆண்டுகள் மட்டுமே சிறந்த வகையில் இயங்கும் என்கின்ற நிலையில் 7 ஆண்டுகள் 6 மாதங்கள் முடிவடைந்துள்ளதால் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே பழைய பேட்டரிகளை கொடுத்துவிட்டு அவசர அவசியம் கருதி புதிய பேட்டரி வாங்கி நிறுவ உத்தேச செலவினம் ரூ .1,10,000/- க்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>1.அனுமதிக்கலாம்<br>2.செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்.8421/2012/இ1) | **தீர்மான எண்.616 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**